ஓம் சரவண பவ

ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து குரோதி ஆண்டு ஆனித் திங்கள் பௌர்ணமி நன்னாளாம் இந்த நாளுக்குண்டான ஓங்காரக்குடிலின் விழா மற்றும் அன்பர்கட்கான அரங்கமகானின் அருளாசி அறிவுரை ஆசி விளக்கம்

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி அறிவுரை நூல்**

21.06.2024

1. ஏழாம் படை வீடு கொண்டு இந்த கலியுகத்தில்
இனிதே ஆறுமுகப்பெருமான் தானும்
காலமதில் உலகோர்க்கு ஞானம் புரிய
கலியுகத்தில் அரங்கன் என்னை அவதாரமாக்கி

2. ஆக்கியே இந்த கலியுகத்தில்
அகத்தியர் சன்மார்க்க சங்கம்
ஆற்றல்பட ஞானசபையாக நிறுவி
அற்புதமாய் பிரணவக் குடில் தன்னில்

3. அறமும் தருமமும் ஜீவதயவும்
அளவிலா மகா சக்தியாக்கி இதனை வரமாக
வரமாக அரங்கன் என் வழி
வழிகாட்டலாக என் தொண்டர் பெருமக்கட்கு

4. பெருமைபட ஆறுமுகனார் வழிநடத்த
பிரணவக்குடிலாசான் அரங்கன் யானும்
யானுமே அவதாரத்தின் பூர்த்தியாக
ஆற்றல்பட ஜீவ ஒளி கலந்து

5. அருளாசியாக என் தொண்டர் பெருமக்கட்கு
அருளுவேன் குரோதி ஆண்டு
ஆனித் திங்கள் முழுமதி இந்த நன்னாளில்
நாளதனில் என் சீடர் பெருமக்கள்

6. நன்மைபட முதல் நாளில் நடத்திய
நாட்டிடுவேன் ஓங்காரக்குடிலின் விழா
சிறப்பாக அரங்கேறியது
ஐயமற அரங்கன் இந்த விழா கண்டு மகிழ்ந்தேன்

7. ஆற்றல்பட என் அன்பர்கட்கும்
இனிதே இதில் பங்காற்றி தொண்டாற்றி
பழுதின்றி பொருளுதவி செய்து
விழாவில் கலந்து கொண்டு

8. வந்தநல் அன்பர் பெருமக்கள்
அனைவருக்கும் அரங்கன் யான்
சூட்சுமமாய் ஆசி தந்தேன்
உணவுமாக சூட்சும சக்தியாக

9. ஒளியாக ஆற்றலாக உட்கலந்து
இந்தவித நன்னாளில் அரங்கன் யான்
வரமீந்தேன் வந்து கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும்
அவ்வாறே இது காலம் இந்த நன்னாளில்

10. ஆற்றல்பட நடந்த பூஜைக்கும்
அரங்கன் ஒளியாக நின்று காட்சியும்
ஆசியும் பரிபூரணமாய் தந்து நின்றேன்
நின்றபடி என் தொண்டர்களின் நிர்வாகம் சிறப்பு

11. நின்றபடி என் தொண்டர்களின் தர்மமும் சிறப்பு
நன்றாக அரங்கன் யானே உள்ளிருந்து
நன்மை புரிவேன் ஞானமும் தருவேன்
நன்மைபட இன்னும் நிர்வாகத்தில் உயர்மக்களை

12. நாட்டிடுவேன் பொருளாதார வகை உதவி கூட்டி
நாளும் நாளும் அரங்கன் யான் துவக்கிய தர்மம்
வளரவும் இன்னும் பெருகவும் வகை செய்து
வையகத்தில் ஓங்காரக்குடிலின் தர்மபலத்தை

13. உலகே அறிய அருள் செய்வேன்
அருளவே இந்தவித நன்னாளில்
அன்பர்கட்கு மனபலம் பெருக
ஆற்றல்பட அவர்களுக்கு உண்டான

14. தைரியமும் திடமும் பயண பாதுகாப்பும் தெளிவும்
பழுதின்றி ஞானபலமும் அடைய
அரங்கன் இன்று காலை பூஜையில்
சர்வ வரமாய் அன்பர்கட்கு சூட்சும

15. சக்தி ஈந்து ஆசி தந்தேன்
தந்தபடி ஒளியேற்றி தக்கபடி
தவராஜன் என்னை எண்ணும்
மக்களுக்கு சிந்தை கலந்து

16. சிவராஜயோகியாய் யான்
சூட்சுமம் பல விளக்கி

ஞானமொடு அவர்கட்கு
தானதர்ம பலத்தையும்

17. வாழுங்காலம் தேகமனோ பலம் கூட்டியும்
திடமொடு அவர்கள் விரும்புகின்ற வண்ணம்
வருங்காலம் ஞானவழி வாசிவசம் யோகம் சர்வமும்
வரமாக்கி தந்து அரங்கன் துணை புரிவேன்

18. துணைபுரிய ஓங்காரக்குடிலின் தொடர்பு கொண்டு
தொடர்ந்து உலகோர் தர்மமும்
தயவும் பெருக்கி வர
அன்பர்கள் அனைவருக்கும் அரங்கன் என் ஆசியாலே

19. அழியாமை என்கின்ற மகா சக்தி ஆற்றலாக கிட்டவும்
அன்னவர்கள் அருள் பொருள் வளத்தோடு
வந்த நோக்கம் பூர்த்தி கொள்ளவும்
அரங்கன் என் துணைபலம் பரிபூரணமாய் உண்டாகும்

20. ஆகவே தொடர்ந்து முழுமதி காலந்தோறும்
அன்பர் பெருமக்கள் ஓங்காரக்குடிலில்
தொடர்ந்து நடக்கும் விழாவில்
உலக மக்கள் வந்து கலந்து

21. அவரவர்கள் சக்திக்கு தக்கவாறு
பொருளுதவி செய்து தர்மத்தின் பலத்தை பெருக்க
தவராஜன் யான் வந்து கலந்து கொள்ளும் அன்பர்கட்கு
தக்க வழிகாட்டலும் தானவர்கள் செய்து கொண்டு வருகின்ற

22. தேட்டு வகை சார்பு லாபமும் யோகமும்
பொதுவளமும் கூட்டி புண்ணியவான்கள்
என்பதோடு சீமான்கள் என்னும்
பெருநிலை அடையவும் அருள்புரிவேன்

23. அருளவே இவ்வாறு அரங்கன் என் நாமஜெபமும் கூடி
அகிலத்தில் எங்கு தர்மங்கள் செய்யப்படுகின்றதோ
அங்கெல்லாம் அரங்கன் இறங்கி
ஆற்றல்பட அற்புதம் நடத்துவேன்

24. அன்னதனால் முழுமதி பூஜை
உலகோர்க்கு சித்தர்கள் நேரிடை இறங்கி
அருளும் சக்திமிகு பூஜையாகும்
பிரணவக் குடிலில் நடக்கும் பூஜை

25. முருகப்பெருமான் அன்னவரே முன்னின்று
நடத்துகின்ற மகா பூஜையாகும்
இந்த பூஜையில் கலந்து கொள்ள
புண்ணிய பலம் வேண்டும்

27. அவ்வாறு வருபவர்கள் அனைவருக்கும்
அரங்கன் யான் புண்ணிய பலத்தோடு
இனி பிறவாத பெரும்பேற்றுக்கு
உண்டான மகாபலம் தந்து அருள்புரிவேன்

28. அருளவே இவை பூஜை நன்னாளில்
அன்பர்கள் தொடர்ந்து கலந்து கொண்டு
ஆற்றல்பட சைவ நெறி முறைப்பட
சித்தர்கள் நாமஜெபம் கூடி

29. சித்திக்கு உண்டான தர்மத்தை
கையிலெடுத்து செயல்பட
யாவருமே சித்தர் பெரும் சக்தி நிலை கூடி
உலகோர் பிறவாத பெரும்பேறு காணும்

30. பாக்கியமும் யோகமும் அடையக் கூடும்
ஆகவே அரங்கன் யான்
என் அன்பர்கட்கு இன்று அகமகிழ்ந்து
அருளாசியாக இந்த முழுமதி நன்னாளில் வரமீந்தேன்
அரங்கன் யான் அருளிய ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–